# கணக்கீடு

## பங்குடைமையொன்றின் வருமானக்கூற்றை தயாரித்து பங்காளரிடையே இலாப நட்டங்களை பகிர்வு செய்தல்



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

தேர்ச்சி மட்டம் 10.4

# இலாபநட்ட பகிர் கணக்கு

பங்காளரிடம் தொடர்புடைய செலவீனங்களையும், வருமானங்களையும் பங்காளர்களுக்கிடையே எவ்வாறு பகிர்வு செய்யப்படுகின்றது என்பதை பதிவு செய்து காட்டும் கணக்கு இலாபநட்ட பகிர் கணக்காகும்

## இலாப நட்ட பகிர் கணக்கின் மாதிரி வடிவம்

| விபரம் | | தொகை | தொகை | தொகை |
|---|---|---|---|---|
| தேறியலாபம் | | | | XXX |
| வரவு மீதியுள்ள நடைமுறைக் கணக்கு வட்டி - ரவி | | | | XXX |
| | | | | XXX |
| மூலதன வட்டி | கவி | XX | | |
| | புவி | XX | | |
| | ரவி | XX | XXX | |
| பங்காளர் சம்பளம் | கவி | XX | | |
| | புவி | XX | | |
| | ரவி | XX | XX | |
| செலவு மீதியுள்ள நடைமுறைக் கணக்கு வட்டி | கவி | XX | | |
| | புவி | XX | XX | (XXX) |
| இறுதியாக பகிரக்கூடிய இலாபம் | | | | XXX |
| இறுதி இலாபப் பகிர்வு | கவி | | XX | |
| | புவி | | XX | |
| | ரவி | | XX | (XXX) |

**தொகுப்பு** : திரு.சி.திருக்குமரன் ஆசிரியர் - கணக்கீடு (யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை)

**கணினி வடிவமைப்பு** : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## வினாக்கள் 10.4.1

பங்குடமையொன்றின் மாதா, பிதா, குரு என்போர் பின்வரும் உடன்படிக்கையின் கீழ் பங்காளராக தொழிற்படுகின்றனர்

1. இலாப நட்ட வீதம் முறையே 5:3:2
2. மூலதன வட்டி ஆண்டுக்கு 10%
3. பங்காளர் சம்பளம் முறையே மாதாந்தம் ரூ.15000, ரூ.10000, ரூ.8000
4. செலவு மீதியுள்ள நடைமுறைக் கணக்கிற்கு ஆண்டுக்கு 15% வட்டி
5. பங்காளர் கடனிற்கு ஆண்டுக்கு 8% வட்டி

01.04.2018 இல் உள்ள மீதிகள் முறையே

| | மூலதனம் | நடைமுறைக் கணக்கு | கடன் |
|---|---|---|---|
| மாதா | 300000 | 40000 | - |
| பிதா | 200000 | 20000 | 25000 |
| குரு | 100000 | (10000) | - |

### மேலதிக தகவல்கள்

1. 31.03.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான கடன் வட்டி தாக்கல் செய்யமுன் பெறப்பட்ட தேறியலாபம் ரூ.540000
2. ஆண்டுக்கான பற்றுக்கள் முறையே ரூ.10000, ரூ.8000, ரூ.6000
3. பிதாவின் சொந்த ஆயுட் காப்புறுதிக்கட்டணம் ரூ.10000 பங்குடைமையால் செலுத்தப்பட்டு பங்குடைமையின் காப்புறுதிக்கணக்கில் பதியப்பட்டுள்ளது
4. பங்குடைமையானது மாதாவின் கட்டிடத்தில் தொழிற்படுகின்றது மாதாந்த கட்டிட வாடகையாக ரூ.3000 வழங்கப்பட வேண்டும். ஆண்டு காலத்தில் 10 மாத வாடகை மாத்திரம் செலுத்தப்பட்டு கணக்கில் காட்டப்பட்டுள்ளது.
5. குருவின் பொருள் பற்று ரூ.5000 கணக்குகளில் பதியப்படவில்லை

### வேண்டப்படுவது

1. இலாப நட்ட பகிர் கணக்கு
2. பங்காளர் நடைமுறைக் கணக்கு

**தொகுப்பு** : திரு.சி.திருக்குமரன் ஆசிரியர் - கணக்கீடு (யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை)

**கணினி வடிவமைப்பு** : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## வினாக்கள் 10.4.2

பங்குடைமையொன்றில் ராஜா, ராணி, மந்திரி என்போர் பின்வரும் உடன்படிக்கைக்கமைய பங்காளராக தொழிற்படுகின்றனர்

1. இலாப நட்ட வீதம் முறையே 2:2:1
2. மூலதன வட்டி ஆண்டுக்கு 12%
3. பங்காளர் சம்பளம் முறையே மாதாந்தம் ரூ.3000, ரூ.2000, ரூ.1000
4. செலவு மீதியுள்ள நடைமுறைக் கணக்கிற்கு ஆண்டுக்கு 15% வட்டி
5. பங்காளர் கடனிற்கு ஆண்டுக்கு 8% வட்டி

31/03/2019 இல் உள்ளவாறான பரீட்சை மீதி வருமாறு

| விபரம் | | வரவு | செலவு |
|---|---|---|---|
| கொள்வனவு விற்பனை | | 132000 | 324000 |
| உட்திரும்பல் வெளித்திரும்பல் | | 4000 | 2000 |
| கடன்படுனர் கடன்கொடுனர் | | 42000 | 38000 |
| அறவிடமுடியாக்கடனும் ஐயக்கடன் ஏற்பாடும் | | 2000 | 3000 |
| 1/4/2018 இல் இருப்பு | | 32000 | |
| உட்காவுகை | | 3000 | |
| சம்பளம் | | 84000 | |
| மின்சாரம் | | 4000 | |
| விளம்பரம் | | 2000 | |
| பெற்ற தரகு | | | 3000 |
| பொதிகட்டும் பொருள் | | 4000 | |
| காப்புறுதி | | 5000 | |
| மூலதனக் கணக்கு | ராஜா | | 160000 |
| | ராணி | | 120000 |
| | மந்திரி | | 100000 |
| நடைமுறைக் கணக்கு | ராஜா | | 30000 |
| | ராணி | | 20000 |
| | மந்திரி | 10000 | |

**தொகுப்பு** : திரு.சி.திருக்குமரன் ஆசிரியர் - கணக்கீடு (யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை)

**கணினி வடிவமைப்பு** : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

| | | |
|---|---|---|
| பற்றுக் கணக்கு ராஜா | 5000 | |
| ராணி | 6000 | |
| மந்திரி | 3000 | |
| கட்டிடமும் தேய்மான ஏற்பாடும் | 180000 | 48000 |
| மோட்டாரும் தேய்மான ஏற்படும் | 160000 | 38000 |
| ராஜா கடன் வட்டி | 6000 | |
| ராஜா கடன் | | 100000 |
| காசுக் கட்டுப்பாட்டு கணக்கு | 311000 | |
| | **986000** | **986000** |

**மேலதிக தகவல்கள்**

1. 31/3/2019 இல் உள்ளவாறான இருப்புக்கள் 44000 ஆகும். இதில் பழுதடைந்த பொருள் ரூபா 3200 உள்ளது இதனை ரூபா 2400 மதிப்பில் எடுக்க தீர்மானிக்கப்பட்டது.
2. காப்புறுதியில் ரூபா 1200 உம், மின்சாரத்தில் ரூபா 800 உம் தீர்க்கப்படாதுள்ளதுடன் பொதிகட்டும் பொருளில் 600 பயன்படுத்தப்படாதுள்ளது.
3. நிலையான சொத்துக்களுக்கு பின்வருமாறு தேய்விடுக (கட்டிடம் 4%, மோட்டார் 8%)
4. அறவிடமுடியாக்கடனாக மேலும் ரூபா 2000 பதிவளிப்பதுடன் ஐயக்கடன் ஏற்பாட்டை எஞ்சிய கடன்பட்டோரில் 10% சீராக்குக
5. 19/11/2018 இல் ஏற்பட்ட தீ விபத்தொன்றில் ரூபா 4000 கிரயமான பண்டங்கள் அழிக்கப்பட்டன இவற்றின் கிரயத்தில் 80% காப்புறுதிக் கம்பனி நட்டஈடாக தர முன்வந்தது
6. 31/12/2018 இல் ரூபா 20000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்று பண்டக் கொள்வனவாக பதிவிடப்பட்டுள்ளது
7. 30/06/2018 இல் ராணி என்பவர் ரூபா 2000 கிரயமான பண்டங்களை சொந்த தேவைக்கு பற்றினார் இவை பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை
8. பங்காளர்கள் ஒவ்வொருவரும் தமது சம்பளங்களை காசாக எடுத்திருந்தனர் இவை காசேட்டிலிருந்து சம்பளக் கணக்கிற்கு வரவிடப்பட்டது.

**தயாரிக்குக**

1. 31/03/2019 இல் முடிவுற்ற நிதி வருடத்திற்கான வருமானக்கூற்று (பகிர்வு உட்பட)
2. பங்காளர் நடைமுறைக் கணக்கும் மூலதனக் கணக்கும்
3. 31/03/2019 இல் நிதி நிலைமைக்கூற்று

**தொகுப்பு** : திரு.சி.திருக்குமரன் ஆசிரியர் - கணக்கீடு (யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை)

**கணினி வடிவமைப்பு** : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk